(பத்தாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 65.]**

# பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2025 யூலை 08, செவ்வாய்க்கிழமை மு.ப. 9.30 மணிக்கு

## சமூகமளித்தோர்:

**கௌரவ (டாக்டர்) ஜகத் விக்கிரமரத்ன,** சபாநாயகர்

**கௌரவ (டாக்டர்) ரிஸ்வி சாலி**, பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும்

**கௌரவ (திருமதி) ஹேமாலி வீரசேகர**, குழுக்களின் பிரதித் தவிசாளர்

---

**கௌரவ கலாநிதி ஹரினி அமரசூரிய,** பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்

**கௌரவ (பேராசிரியர்) ஏ.எச்.எம்.எச். அபயரத்ன,** பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) கிரிஷாந்த அபேசேன,** விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சர்

**கௌரவ அனுர கருணாதிலக்க,** நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சர்

**கௌரவ கே.டீ. லால் காந்த,** கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர்

**கௌரவ சுனில் குமார கமகே,** இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர்

**கௌரவ ராமலிங்கம் சந்திரசேகர்,** கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர்

**கௌரவ குமார ஜயகொடி,** வலுசக்தி அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) நலிந்த ஜயதிஸ்ஸ,** சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் மற்றும் அரசாங்கக் கட்சி முதற்கோலாசான்

**கௌரவ (கலாநிதி) அனில் ஜயந்த,** தொழில் அமைச்சர் மற்றும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர்

**கௌரவ சட்டத்தரணி ஹர்ஷன நாணாயக்கார,** நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) உபாலி பன்னிலகே,** கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சர்

**கௌரவ (திருமதி) சரோஜா சாவித்திரி போல்ராஜ்,** மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ பிமல் ரத்நாயக்க,** போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் மற்றும் பாராளுமன்றச் சபை முதல்வர்

**கௌரவ ஆனந்த விஜேபால,** பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ கே.வி. சமந்த வித்யாரத்ன,** பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர்

**கௌரவ வசந்த சமரசிங்க,** வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,** கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ சஜித் பிரேமதாச,** பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்

**கௌரவ சதுரங்க அபேசிங்ஹ,** கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி பிரதி அமைச்சர்

**கௌரவ நாமல் கருணாரத்ன,** கமத்தொழில் மற்றும் கால்நடை வளங்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ ஜனித ருவன் கொடித்துவக்கு,** துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் பிரதி அமைச்சர்

**கௌரவ ரத்ன கமகே,** கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ எரங்க குணசேகர,** இளைஞர் விவகாரங்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) பிரசன்ன குணசேன,** போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் பிரதி அமைச்சர்

**கௌரவ எண்டன் ஜயகொடி,** சுற்றாடல் பிரதி அமைச்சர்

**கௌரவ ஆர்.எம். ஜயவர்தன,** வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு பிரதி அமைச்சர்

**கௌரவ மஹிந்த ஜயசிங்ஹ,** தொழில் பிரதி அமைச்சர்

**கௌரவ மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) அருண ஜயசேகர,** பாதுகாப்பு பிரதி அமைச்சர்

**கௌரவ சுகத் திலகரத்ன,** விளையாட்டுத்துறை பிரதி அமைச்சர்

**கௌரவ கமகெதர திசாநாயக்க,** புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ வசந்த பியதிஸ்ஸ,** கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை பிரதி அமைச்சர்

**கௌரவ சுந்தரலிங்கம் பிரதீப்,** பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் பிரதி அமைச்சர்

**கௌரவ முனீர் முலாபர்,** தேசிய ஒருமைப்பாட்டு பிரதி அமைச்சர்

**கௌரவ (பேராசிரியர்) ருவன் ரணசிங்க,** சுற்றுலா பிரதி அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) சுசில் ரணசிங்ஹ,** காணி மற்றும் நீர்ப்பாசன பிரதி அமைச்சர்

**கௌரவ சட்டத்தரணி சுனில் வடகல,** பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ எரங்க வீரரத்ன,** டிஜிட்டல் பொருளாதார பிரதி அமைச்சர்

**கௌரவ உபாலி சமரசிங்ஹ,** கூட்டுறவு அபிவிருத்தி பிரதி அமைச்சர்

**கௌரவ ரீ. பீ. சரத்,** வீடமைப்பு பிரதி அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) நாமல் சுதர்சன,** மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ பி. ருவன் செனரத்,** மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி பிரதி அமைச்சர்

**கௌரவ அருண் ஹேமச்சந்திரா,** வெளிநாட்டலுவல்கள் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதி அமைச்சர்

**கௌரவ நலின் ஹேவகே,** தொழிற் கல்வி பிரதி அமைச்சர்

---

**கௌரவ ரொஷான் அக்மீமன**

**கௌரவ அஜித் அகலகட**

**கௌரவ அமிர்தநாதன் அடைக்கலநாதன்**

**கௌரவ அபூபக்கர் ஆதம்பாவா**

**கௌரவ ஹெக்டர் அப்புஹாமி**

**கௌரவ ரோஹித அபேகுணவர்தன**

**கௌரவ சட்டத்தரணி யூ.பி. அபேவிக்ரம**

**கௌரவ (பேராசிரியர்) எல்.எம். அபேவிக்ரம**

**கௌரவ (டாக்டர்) நிஹால் அபேசிங்ஹ**

**கௌரவ (டாக்டர்) இராமநாதன் அர்ச்சுனா**

**கௌரவ ஜே.சீ. அலவத்துவல**

**கௌரவ எம்.கே. எம். அஸ்லம்**

**கௌரவ லக்ஸ்மன் நிபுண ஆரச்சி**

**கௌரவ மஞ்ஜுள சுரவீர ஆரச்சி**

**கௌரவ (கலாநிதி) (செல்வி) கௌஷல்யா ஆரியரத்ன**

**கௌரவ பீ. ஆரியவங்ஷ**

**கௌரவ (டாக்டர்) நஜீத் இந்திக்க**

**கௌரவ அர்கம் இல்யாஸ்**

**கௌரவ எம்.எஸ். உதுமாலெப்பை**

**கௌரவ கயந்த கருணாதிலக்க**

**கௌரவ ரவி கருணாநாயக்க**

**கௌரவ (செல்வி) கிருஷ்ணன் கலைச்செல்வி**

**கௌரவ சனாதிபதி சட்டத்தரணி எம். நிசாம் காரியப்பர்**

**கௌரவ உபுல் கித்சிறி**

**கௌரவ (திருமதி) சட்டத்தரணி சமிந்திரானி கிரிஎல்லே**

**கௌரவ கதிரவேலு சண்முகம் குகதாசன்**

**கௌரவ வசந்த புஷ்ப குமார**

**கௌரவ சமிந்த லலித் குமார**

கௌரவ சட்டத்தரணி சரத் குமார

கௌரவ (திருமதி) சட்டத்தரணி நிலந்தி கொட்டஹச்சி

கௌரவ கவீந்திரன் கோடீஸ்வரன்

கௌரவ மனோ கணேசன்

கௌரவ லசித் பாஷண கமகே

கௌரவ திலங்க யூ. கமகே

கௌரவ அஜந்த கம்மெத்தெகே

கௌரவ சதுர கலப்பத்தி

கௌரவ நிஹால் கலப்பத்தி

கௌரவ அஜித் கிஹான்

கௌரவ (டாக்டர்) ஜகத் குணவர்தன

கௌரவ (திருமதி) சமன்மலீ குணசிங்ஹ

கௌரவ அசோக குணசேன

கௌரவ டி.வீ. சானக

கௌரவ ருவன்திலக்க ஜயகொடி

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ

கௌரவ சட்டத்தரணி அநுராத ஜயரத்ன

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன

கௌரவ (திருமதி) சட்டத்தரணி துஷாரி ஜயசிங்ஹ

கௌரவ ரீ.கே. ஜயசுந்தர

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர

கௌரவ மயில்வாகனம் ஜெகதீஸ்வரன்

கௌரவ றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி

கௌரவ (டாக்டர்) செல்லத்தம்பி திலகநாதன்

கௌரவ (திருமதி) சட்டத்தரணி அனுஸ்கா திலகரத்ன

கௌரவ சந்தன தென்னகோன்

கௌரவ சாமர சம்பத் தசனாயக

கௌரவ சுகத் வசந்த த சில்வா

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா

கௌரவ பழனி திகாம்பரம்

கௌரவ தர்மப்பிரிய திசாநாயக்க

கௌரவ சுஜீவ திசாநாயக்க

கௌரவ சட்டத்தரணி சுசந்த தொடாவத்த

கௌரவ டப்ளியூ.எச்.எம். தர்மசேன

கௌரவ சுசந்த குமார நவரத்ன

கௌரவ (பேராசிரியர்) சேன நாணாயக்கார

கௌரவ கிங்ஸ் நெல்சன்

கௌரவ நந்தன பத்மகுமார

கௌரவ அருண பனாகொட

கௌரவ நிமல் பலிஹேன

கௌரவ நிஷாந்த பெரேரா

கௌரவ அஜித் பி. பெரேரா

கௌரவ கே. சுஜித் சஞ்ஜய பெரேரா

கௌரவ ஜீ.ஜீ. பொன்னம்பலம்

கௌரவ சட்டத்தரணி சித்ரால் பெர்னாந்து

கௌரவ ஸ்டெபனி பிரனாந்து

கௌரவ கந்தசாமி பிரபு

கௌரவ அமில பிரசாத்

கௌரவ லால் பிரேமநாத்

கௌரவ ரோஹண பண்டார

கௌரவ நந்த பண்டார

கௌரவ பத்மசிரி பண்டார

கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்தும பண்டார

கௌரவ ரவீந்திர பண்டார

கௌரவ றிஸாட் பதியுதீன்

கௌரவ சுதத் பலகல்ல

கௌரவ (டாக்டர்) எஸ். ஸ்ரீ பவானந்தராஜா

கௌரவ ஈ.எம். பஸ்நாயக

கௌரவ விஜேசிரி பஸ்நாயக்க

கௌரவ சுனில் பியன்வில

கௌரவ (டாக்டர்) சந்தருவன் மதரசிங்ஹ

கௌரவ லெப்டினன் கமாண்டர் (ஓய்வுபெற்ற) பிரகீத் மதுரங்க

கௌரவ ஜகத் மனுவர்ண

கௌரவ எஸ்.எம். மரிக்கார்

கௌரவ கே.காதர் மஸ்தான்

கௌரவ இம்ரான் மகரூப்

கௌரவ ருவன் மாபலகம

கௌரவ (கலாநிதி) நந்தன மில்லகல

கௌரவ சஞ்ஜீவ ரணசிங்ஹ

கௌரவ ஆர்.எம். சமந்த ரனசிங்ஹ

கௌரவ சுனில் ரத்னசிரி

கௌரவ ஆர்.எம். காமிணி ரத்நாயக்க

கௌரவ மஞ்சுல சுகத் ரத்னாயக

கௌரவ சுரங்க ரத்நாயக்க

கௌரவ (திருமதி) ஏ.எம்.எம்.எம். ரத்வத்தே

கௌரவ அசோக சபுமல் ரன்வல

கௌரவ துரைராசா ரவிகரன்

கௌரவ முஜிபுர் ரஹுமான்

கௌரவ சட்டத்தரணி நாமல் ராஜபக்ஷ

கௌரவ மனோஜ் ராஜபக்ஷ்

கௌரவ சுனில் றாஜபக்ஷ

கௌரவ (கலாநிதி) வீ.எஸ். இராதாகிருஷ்ணன்

கௌரவ (திருமதி) சட்டத்தரணி ஹசாரா லியனகே

கௌரவ (திருமதி) தீப்தி வாசலகே

கௌரவ எம்.எஸ் அப்துல் வாசித்

கௌரவ கஞ்சன வெலிப்பிட்டிய

கௌரவ ஆர்.ஜீ. விஜேரத்ன

கௌரவ சட்டத்தரணி பிரியந்த விஜேரத்ன

கௌரவ ருவன் விஜேவீர

கௌரவ (திருமதி) சட்டத்தரணி ஹிருனி விஜேசிங்ஹ

கௌரவ சமிந்த விஜேசிறி

கௌரவ ஜகத் விதான

கௌரவ திலிப் வெதஆரச்சி

கௌரவ அதுல வெலதகொட

கௌரவ சிவஞானம் சிறீதரன்

கௌரவ பஸ்மின் சரீப்

கௌரவ (டாக்டர்) பத்மநாதன் சத்தியலிங்கம்

கௌரவ திலிண சமரகோன்

கௌரவ (டாக்டர்) நிஷாந்த சமரவீர

**கௌரவ (செல்வி) அம்பிகா சாமிவெல்**

**கௌரவ (டாக்டர்) இளையதம்பி சிறிநாத்**

**கௌரவ ஷாந்த பத்ம குமார சுபசிங்ஹ**

**கௌரவ தேவானந்த சுரவீர**

**கௌரவ சந்தன சூரியஆரச்சி**

**கௌரவ மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) ஜீ.டி.சூரியபண்டார**

**கௌரவ அரவிந்த செனரத்**

**கௌரவ கிட்ணன் செல்வராஜ்**

**கௌரவ சட்டத்தரணி ரஊப் ஹகீம்**

**கௌரவ கபீர் ஹஷீம்**

**கௌரவ (கலாநிதி) எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்**

**கௌரவ சந்திம ஹெட்டிஆரச்சி**

**கௌரவ சம்பிக ஹெட்டிஆரச்சி**

**கௌரவ தினிந்து சமன் ஹென்னாயக்க**

**கௌரவ (செல்வி) சட்டத்தரணி லக்மாலி ஹேமசந்திர**

**கௌரவ தினேஷ் ஹேமந்த**

**கௌரவ (திருமதி) சட்டத்தரணி கீதா ஹேரத்**

**கௌரவ சட்டத்தரணி பாக்ய ஶ்ரீ ஹேரத்**

**கௌரவ முஹம்மட் பைசல்**

**கௌரவ ரியாஸ் பாருக்**

திருமதி குஷானி ரோஹனதீர, பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திரு. சமிந்த குலரத்ன, பதவியணிப் பிரதானி மற்றும் பாராளுமன்றப் பிரதிச் செயலாளர் நாயகம்

திரு. ஹன்ஸ அபேரத்ன, உதவிச் செயலாளர் நாயகம்

**ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. சபாநாயகர் தலைமை தாங்கினார்.**

**1. புதிய உறுப்பினர்களின் பதவிச் சத்தியம் அல்லது உறுதியுரை:** கௌரவ முகம்மது சரிவு அப்துல் வாஸித் சட்டத்தினால் வேண்டப்பட்டவாறு உறுதிப்பிரமாணம் செய்து சபாபீடத்திலுள்ள புத்தகத்தில் கையொப்பமிட்டார்.

**2. சனாதிபதியின் செய்திகள்:** சனாதிபதியிடமிருந்து கிடைத்த பின்வரும் செய்தியைச் சபாநாயகர் வாசித்தார்:—

ශ්‍රී ලංකා ජනාධිපති
இலங்கை சனாதிபதி
President of Sri Lanka

எனது இல: பிஎஸ்/சிஎஸ்ஏ/00/7/IX/3/01

2025 யூன் மாதம் 26 ஆந் திகதி

**கௌரவ ஜ.டபிள்யு.எம். ஜகத் விக்கிரமரத்ன அவர்கள்**
சபாநாயகர்
இலங்கை பாராளுமன்றம்

மாண்புமிகு சபாநாயகர் அவர்களே

**(40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம்**

(40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 12 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு, மக்களிடையே அமைதியைப் பேணுவதற்கான தேவையைக் கருத்திற்கொண்டு, முதலாம் அட்டவணையில் குறித்துரைத்துக் காட்டப்படும் ஆயுதந்தாங்கிய படையின் சகல உறுப்பினர்களும் அதன் இரண்டாம் அட்டவணையில் குறித்துரைத்துக் காட்டப்பட்ட பிரதேசங்களில் மக்களிடையே அமைதியைப் பேணுவதற்காக அழைக்கப்படுகின்றனர் என ஆணையிடப்பட்டுள்ளது.

அதற்கமைய, மேற்படி கட்டளைச் சட்டத்தின் 21(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2(3) பிரிவுக்கமைய அதனை இத்தால் பாராளுமன்றத்துக்கு அறிவிக்கின்றேன்.

இங்ஙனம் - அன்புள்ள

அநுர குமார திசாநாயக்க
சனாதிபதி

ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு
Democratic Socialist Republic of Sri Lanka

**3. பத்திரங்கள் சமர்ப்பித்தல்:** (1) சபாநாயகர், இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் 2024 ஆம் நிதியாண்டுக்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் நான்காம் தொகுதியின் I ஆம் பகுதியை சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனவும் அச்சிடப்பட வேண்டுமெனவும் கட்டளையாயிற்று.

(2) சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் —

(i) 2024 ஆம் ஆண்டுக்கான அரசாங்க விலைமதிப்புத் திணைக்களத்தின் செயலாற்றுகை அறிக்கை;

(ii) 2024 ஆம் ஆண்டுக்கான இலங்கை மதுவரித் திணைக்களத்தின் செயலாற்றுகை அறிக்கை;

(iii) 2024 ஆம் ஆண்டுக்கான அரச நிதித் திணைக்களத்தின் செயலாற்றுகை அறிக்கை;

(iv) 2024 ஆம் ஆண்டுக்கான அரச கணக்குகள் திணைக்களத்தின் செயலாற்றுகை அறிக்கை;

(v) 2024 ஆம் ஆண்டுக்கான முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்தின் செயலாற்றுகை அறிக்கை;

(vi) 2024 ஆம் ஆண்டுக்கான அபிவிருத்தி நிதித் திணைக்களத்தின் செயலாற்றுகை அறிக்கை;

(vii) 2024 ஆம் ஆண்டுக்கான கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை;

(viii) 2024 ஆம் ஆண்டுக்கான இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் செயலாற்றுகை அறிக்கை;

(ix) 2024 ஆம் ஆண்டுக்கான தகவல் தொழிநுட்ப முகாமைத்துவ திணைக்களத்தின் செயலாற்றுகை அறிக்கை;

(x) 2024 ஆம் ஆண்டுக்கான தேசிய வரவுசெலவுத் திட்டத் திணைக்களத்தின் செயலாற்றுகை அறிக்கை;

(xi) 2024 ஆம் ஆண்டுக்கான சட்ட அலுவல்கள் திணைக்களத்தின் செயலாற்றுகை அறிக்கை;

(xii) 2024 ஆம் ஆண்டுக்கான வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் செயலாற்றுகை அறிக்கை; மற்றும்

(xiii) 2024 ஆம் ஆண்டுக்கான தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

ஆகியவற்றைச் சமர்ப்பித்து, அவ்வறிக்கைகள் பொருளாதார அபிவிருத்தி மற்றும் சர்வதேச உறவுகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(3) சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் —

(i) 2024 ஆம் ஆண்டுக்கான தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் செயலாற்றுகை அறிக்கை;

(ii) 2024 ஆம் ஆண்டுக்கான நிதி ஆணைக்குழுவின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை;

(iii) 2024 ஆம் ஆண்டுக்கான கணக்காய்வு சேவை ஆணைக்குழுவின் செயலாற்றுகை அறிக்கை;

(iv) 2024 ஆம் ஆண்டுக்கான தேர்தல் ஆணைக்குழுவின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை;

(v) 2024 ஆம் ஆண்டுக்கான பகிரங்க சேவை ஆணைக்குழுவின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை; மற்றும்

(vi) 2024 ஆம் ஆண்டுக்கான சனாதிபதி செயலகத்தின் செயலாற்றுகை அறிக்கை

ஆகியவற்றைச் சமர்ப்பித்து, அவ்வறிக்கைகள் ஆளுகை, நீதி மற்றும் சிவில் பாதுகாப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(4) சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் —

(i) 2024 ஆம் ஆண்டுக்கான சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் வெகுசன ஊடகப் பிரிவின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை; மற்றும்

(ii) 2024 ஆம் ஆண்டுக்கான அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

ஆகியவற்றைச் சமர்ப்பித்து, அவ்வறிக்கைகள் சுகாதாரம், வெகுசன ஊடகம் மற்றும் மகளிர் வலுவூட்டல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(5) வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர், 2018 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு மற்றும் எதிரீட்டுத்தீர்வைகள் சட்டத்தின் 64, 65, 66, 69 மற்றும் 70 ஆம் பிரிவுகளுடன் மற்றும் 45(5) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 84 ஆம் பிரிவின் கீழ் வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2025 மார்ச் 27 ஆம் திகதிய 2429/32 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகளை சமர்ப்பித்து, அவ்வொழுங்குவிதிகள் வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு மற்றும் அரசாங்க நிதி பற்றிய குழு ஆகியவற்றிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(6) பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர், 2024 ஆம் ஆண்டுக்கான பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையைச் சமர்ப்பித்து, அவ்வறிக்கை ஆளுகை, நீதி மற்றும் சிவில் பாதுகாப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(7) நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சர்—

(i) 2023 ஆம் ஆண்டுக்கான நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் ஆண்டறிக்கை; மற்றும்

(ii) 2024 ஆம் ஆண்டுக்கான நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

ஆகியவற்றைச் சமர்ப்பித்து, அவ்வறிக்கைகள் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் மூலோபாய அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(8) இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் —

(i) 2024 ஆம் ஆண்டுக்கான இளைஞர் அலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை; மற்றும்

(ii) 2024 ஆம் ஆண்டுக்கான விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

ஆகியவற்றைச் சமர்ப்பித்து, அவ்வறிக்கைகள் கல்வி, ஊழியப் படை மற்றும் மனித மூலதனம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(9) பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர், 2024 ஆம் ஆண்டுக்கான பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையைச் சமர்ப்பித்து, அவ்வறிக்கை ஆளுகை, நீதி மற்றும் சிவில் பாதுகாப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(10) சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர், 2024 ஆம் ஆண்டுக்கான கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையைச் சமர்ப்பித்து, அவ்வறிக்கை கல்வி, ஊழியப் படை மற்றும் மனித மூலதனம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**4. குழுக்களின் அறிக்கைகள் சமர்ப்பித்தல்:** (1) அரசாங்க நிதி பற்றிய குழுவின் தவிசாளர் கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா, அக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட, 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க சட்டங்களின் மூலம் திருத்தப்பட்ட 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு)ச் சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 20 ஆம் பிரிவின் கீழான ஒழுங்குவிதிகள் (2025 மே 19 ஆம் திகதிய 2437/04 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டது) தொடர்பிலான அக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(2) சுகாதாரம், வெகுசன ஊடகம் மற்றும் மகளிர் வலுவூட்டல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தவிசாளர் கௌரவ (டாக்டர்) நிஹால் அபேசிங்ஹ அக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட—

(i) 2023 ஆம் ஆண்டுக்கான நன்னடத்தை, சிறுவர் பாதுகாப்புச் சேவைகள் திணைக்களத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை; மற்றும்

(ii) 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கான தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் ஆண்டறிக்கைகள்

தொடர்பிலான அக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(3) அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் தவிசாளர், கௌரவ அரவிந்த செனரத் பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடருக்கான அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் முதலாவது அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனவும் அச்சிடப்பட வேண்டுமெனவும் கட்டளையாயிற்று.

**5. பொது மனுக்கள் சமர்ப்பித்தல்:**

(1) உனவட்டுன, கணஹேன, இல. 350 இல் வதியும் திரு. கே.டி.எச்.எஸ்.எஸ். த சில்வாவினது 2025.03.25 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ ரத்ன கமகே சமர்ப்பித்தார்.

(2) கொகெரெல்ல, இஹலகம, கொடகம எனும் முகவரியில் வதியும் திரு. என்.பி. சமந்த விஜேசேகரவினது 2025.02.17 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர சமர்ப்பித்தார்.

(3) (i) கொஹுவல, விஜயமங்களாராமய வீதி, இல. 9/1 ஏ யில் வதியும் திரு. எச். விமலசிரி கல்தேராவினது 2024.12.19 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்; மற்றும்

(ii) கோட்டே, மாதிவெல, சிகேரா வீதி, இல. 245/5 இல் வதியும் திரு. டப்ளியூ. அநுர சாந்தவினது 2024.12.18 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்

கௌரவ எஸ்.எம். மரிக்கார் சமர்ப்பித்தார்.

(4) கம்பளை, நயாபான, நவ நுகவெல, இல. 126 இல் வதியும் திருமதி ஜே.எம்.ஏ.டி. ஜயசிங்கவினது 2025.03.14 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ சட்டத்தரணி யூ.பி. அபேவிக்ரம சமர்ப்பித்தார்.

(5) செவனகல, டங்டும, குடியிருப்புத் தொகுதி, ஜி 3/7 இல் வதியும் திரு. தேவ ஜயசிரியினது 2025.03.02 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ உபுல் கித்சிரி சமர்ப்பித்தார்.

(6) வாரியபொல, சிலாபம் வீதி, இல. 272/4 இல் வதியும் திரு. ஈ.எம்.ஏ. ஏக்கநாயக்கவினது 2025.03.15 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ சுஜீவ திசாநாயக்க சமர்ப்பித்தார்.

(7) கொடகம, ஹோமாகம, பொரல்ல வீதி, சித்துமின மாவத்தை, இல. 217/2 இல் வதியும் திரு. சந்திரசிரி வெத்தசிங்க லியனகேயினது 2025.03.08 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ அருண பனாகொட சமர்ப்பித்தார்.

(8) (i) போயகனே, இசுரு பிரதேசம், 3 ஆம் ஒழுங்கை எனும் முகவரியில் வதியும் திருமதி டி.ஆர். வேரகல மற்றும் இருவரினதும் 2025.03.07 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(ii) ஹபுருகல, தொட்டகனத்த, பிரகதி மாவத்தை, இல. 22 இல் வதியும் திரு. டி.எம். சிரிவீரவினது 2025.03.11 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(iii) இந்துருவ, ஹெட்டிகொட, 'நுக செவன' எனும் முகவரியில் வதியும் திருமதி தமிதா ஹெட்டிகேயினது 2025.03.14 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(iv) அமுகொட, திக்ஹேன, கொல்கஹகொடல்ல வத்த எனும் முகவரியில் வதியும் திரு. எச்.எச். குமுதுவினது 2025.03.10 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்; மற்றும்

(v) கஹதுவ, மிரிஸ்வத்த, 'நில்மினி' எனும் முகவரியில் வதியும் திரு. ஆர். யசரத்ன விஜேவத்த டயசினது 2025.03.02 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்

கௌரவ நிஷாந்த பெரேரா சமர்ப்பித்தார்.

(9) பொலொன்னறுவை, புதிய நகரம், நீர்ப்பாசனப் பிரதேசம், இல. 1092 இல் வதியும் திருமதி எம்.ஏ.என். பிரியங்கனீயினதும் மற்றும் மேலுமொருவரினதும் 2025.01.25 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ பத்மசிரி பண்டார சமர்ப்பித்தார்.

மேற்படி மனுக்கள் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 30(10) இன் கீழ் பொது மனுக்கள் பற்றிய குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டன.

**6. தேசிய கணக்காய்வு (திருத்தம்):** நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,— 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தினைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

இச் சட்டமூலம் 2025 யூலை 22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரண்டாம் மதிப்பீடு செய்யப்படும் என்றும் இச் சட்டமூலம் அச்சிடப்பட வேண்டுமெனவும் ஆளுகை, நீதி மற்றும் சிவில் பாதுகாப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனவும் கட்டளையாயிற்று.

**7. இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு)ச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்:** பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர் சார்பாக தொழில் அமைச்சர் மற்றும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க சட்டங்களின் மூலம் திருத்தப்பட்ட 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு)ச் சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 20 ஆம் பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2025 மே 19 ஆம் திகதிய 2437/04 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும், 2025.06.17 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(மு.ப. 11.23 மணிக்கு பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.)

(பி.ப. 1.00 மணிக்கு பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.)

"கௌரவ லக்ஸ்மன் நிபுண ஆரச்சி தலைமை தாங்குவாராக" என பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 2.40 மணிக்கு கௌரவ லக்ஸ்மன் நிபுண ஆரச்சி தலைமை தாங்கினார்.)

(பி.ப. 3.53 மணிக்கு குழுக்களின் பிரதித் தவிசாளர் தலைமை தாங்கினார்.)

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**8. ஒத்திவைப்பு (மாற்றுத்திறனாளிகளுக்கான தடையற்ற சமூக வாழ்க்கை):** "இப்பாராளுமன்றம் தற்பொழுது ஒத்திவைக்கப்படுமாக" என கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை எடுத்தியம்பப்பெற்று விவாதிக்கப்பட்டது.

அவ்வேளை, நேரம் பி.ப. 5.30 மணியாகிவிடவே, குழுக்களின் பிரதித் தவிசாளர் பாராளுமன்றத்தை ஒத்திவைத்தார்.

அதன்படி பாராளுமன்றம், 2025 யூலை 09 ஆம் திகதி புதன்கிழமை மு.ப. 9.30 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.